

# வேலை உலகிற்குத் தயாராகுவோம் 05

நமது வாழ்நாளுக்குள் நாம் பல்வேறு பொருட்களையும் சேவைகளையும் உபயோகப்படுத்துகின்றோம். அந்தப் பொருட்களின் உற்பத்திக்காகவும் சேவைகளை வழங்குவதற்காகவும் சமூகத்தில் பல்வேறுபட்ட நடவடிக்கைகளில் மனிதர்கள் ஈடுபடுகின்றனர். இவ்வாறு சமூகத்தில் வாழுகின்ற அனைத்து நபர்களும் தமக்குப் பயனுள்ளதாயும் இலாபகரமானதாயும் தமது செயல்களைத் தீர்மானிக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகளின் மூலமும் சேவையை வழங்குதல் இலாபத்தினைப் பெறுதல் போன்றவற்றின் ஊடாகவும் தமது மனத்திருப்தியை நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். இதன்படி நமது சமூகத்தில் பல்வேறு வேலைகளோ அல்லது தொழில்களோ காணப்படுகின்றன. எனவே வேலை உலகில் பல்வேறுபட்டவர்கள் பல்வேறுவகையான செயற்பாடுகளில் ஈடுபடுவதை நாம் அனைவரும் அறிந்து கொள்ள முடியும். எல்லா வேலைகளும் மக்களின் வாழ்க்கையை நடாத்திச் செல்லப் பெரிதும் உதவியாக உள்ளன. இவ்வாறு மக்களால் மேற்கொள்ளப்படும் வேலைகளையும் அவற்றினது தன்மைகளையும் நீங்கள் இந்த அலகினூடாகக் கற்றுக்கொள்ள முடியும்.

அன்று தரம் 8 இற்கான பாட ஆசிரியர் வகுப்பறைக்கு வந்து 'வேலையின் முக்கியத்துவம்' தொடர்பான பாடத்தைக் கற்பிக்க ஆயத்தமானார். அவ்வேளை அவர் மாணவர்களிடம் கேட்ட முதலாவது வினா:

நீங்கள் படித்து முடித்துவிட்டு வாழ்க்கையை நடாத்திச் செல்வதற்கு உங்களுக்கு விருப்பமான தொழில் என்ன?

மாணவர் அளித்த பல்வேறு பதில்களை ஆசிரியர் கரும்பலகையில் எழுதினார்.


- ஆசிரியராகிக் கற்பிப்பேன்
- இராணுவத்தில் இணைந்து சேவை செய்வேன்
- விமான ஓட்டியாவேன்
- வைத்தியராக வேண்டுமென்று எதிர்பார்க்கின்றேன்.
- ஒப்பனைத் தொழில் செய்ய விருப்பமாக உள்ளது.
- சொந்த வியாபாரம் ஒன்றை ஆரம்பிப்பேன்.

வகுப்பில் மாணவர்களின் பல்வேறு விருப்பங்களைக் கேட்டறிந்து கொண்ட ஆசிரியர் பாடத்தைத் தொடங்குவதற்காகப் பின்வருமாறு கூறினார். நல்லது பிள்ளைகளே! நீங்கள் அனைவரும் கல்விகற்று முடித்த பின்னர் ஏதோ ஒரு வேலையை அல்லது தொழிலைச் செய்ய விருப்பமாக உள்ளீர்கள் அல்லவா? நாம் கல்வியைப் பெறுவதன் ஒரு பிரதான நோக்கம் நமது சிறந்த வாழ்க்கைக்காக இந்த சமூகத்திற்குப் பயனுள்ள ஏதோ ஒரு தொழிலைச் செய்வதாகும். கல்வியின் மூலம் நமக்கு இது தொடர்பான விடயங்களையும் தொழில் வகைகளையும் அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

“ஆசிரியரே, நாம் ஒவ்வொருவரும் விருப்பமான வேறுபட்ட துறைகளில் வேலை செய்யலாம் அல்லவா?” என்று தேவி வினவினாள். ‘‘ஆம் ஒவ்வொரு நபரும் தமது விருப்பம் போல் தன்னுடைய திறமைக்கு ஏற்பத் தொழில்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியும். அதனைப் போலவே தமக்கு விருப்பமான தொழிலுக்கான பயிற்சியினைப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்புகள் இருக்கின்றன.

பிள்ளைகளே, நாம் வாழும் சமூகத்தில் காணப்படும் தொழில் துறைகள் மிகவும் விசாலமானவை அத்தோடு பல்வேறுபட்டவை. பிள்ளைகளே! எதிர்க்காலத்தினை நடாத்திச் செல்ல இலாபகரமான, நம்பிக்கையான வேலைவாய்ப்புகள் பற்றியும் அவற்றைச் சரியாகத் தேர்ந்தெடுத்து முன்னேறுவது பற்றியும் அறிந்துக்கொள்ள வேண்டும். தொழில்களின் விருத்தியினைக் கருதும் போது பல்வேறுபட்ட புதிய தொழில்முறைகள் தொழில் வழங்குநர்களால் அறிமுகப்படுத்தப்படுகின்றன” என ஆசிரியர் இறுதியாகக் கூறினார்.

## 5.1 உலகின் பல்வேறுபட்ட தொழில்கள்



சமூகத்தில் காணப்படும் பல்வேறுபட்ட தொழில்களும் தொழில் துறைகளும் ஒன்று சேர்ந்ததே வேலை உலகம் ஆகும். இதன்படி வேலை உலகத்தில் பல்வேறு தொழில் துறைகளுக்கும் அதனைப் பெறும் வழிமுறைகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்பிருப்பதனை உங்களால் விளங்கிக் கொள்ள முடியும். பல்வேறு தொழில் துறைகளைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும் போது அந்தத் துறைகளினூடாகப் பல்வேறு தொழில்கள் உருவாகுவதனைக் காணக் கூடியதாக உள்ளது. உதாரணமாக மாவட்ட வைத்தியசாலையில் காணப்படும் தொழில் வாய்ப்புகளை ஆராய்ந்து பார்ப்போம்.

வைத்தியர், தாதியர், தாதி உதவியாளர்கள், சாரதி, சுத்திகரிப்புத் தொழிலாளி, வைத்தியசாலைப் பாதுகாப்பு அதிகாரிகள், தொழிலாளர்கள் எழுதுவினைஞர்கள், கணக்காளர்கள், சிகிச்சைக்கள பொறுப்பாளர்கள் போன்ற வேலைகளுக்காகக் காணப்படும் தொழில் வாய்ப்புகள் ஏராளமானவை. இவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் மேற்கொள்ளும் பணிகளூடாகத் தம்மிடையே பல்வேறுபட்ட தொடர்புகளைக் கொண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தமது சேவையை மேற்கொள்வது பொது நோக்கத்தினை அடைவதற்காகவே. எனவே வைத்தியசாலையின் அனைத்து நடவடிக்கைகளும் பொது மக்களுக்குச் சேவை வழங்குவதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. வேலை உலகின் பல்வகைமைக்குப் பல்வேறு காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. பல பிரதேசங்களில் காணப்படும் இயற்கை வளங்கள் அப்பிரதேசத்தின் ஒரு சாதகத் தன்மையாகும். பிரதேசத்தில் விசேடமாகக் காணப்படும் வளங்களினால் பல்வேறுபட்ட தொழில்கள் உருவாகின்றன. மலையகத்தில் தேயிலை உற்பத்தியும் மரக்கறிச் செய்கையும், நாட்டின் மத்திய பிரதேசத்தில் பூக்கள் உற்பத்தி, கடலோரப் பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக்கை, வெவல்தெனிய பிரதேசத்தில் பிரம்புத் தொழில் போன்ற பல்வேறுபட்ட தொழில்கள் பிரதேச அடிப்படையில் நிகழ்கின்றன.



**உரு 5.1 தேயிலை பறித்தல்**



**உரு 5.2 மீன்பிடித்தல்**

பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில்களும் காணப்படுகின்றன. உதாரணமாகத் தங்க ஆபரண உற்பத்தி, முகமூடி உற்பத்தி, மட்பாண்ட உற்பத்தி, பித்தளைப் பொருள் உற்பத்தி போன்ற பாரம்பரியமான தொழில் துறைகளினூடாக மேற்கொள்ளப்படும் உற்பத்திகளுள் பெரும்பாலானவை நாட்டின் தேசிய அடையாளமாகவும் தேசத்தின் பெருமையாகவும் காணப்படுகின்றன.



உரு 5.3 நகை செய்தல்



உரு 5.4 முகமூடிக் கைத்தொழில்

தொழில் வழங்கும் துறைகளும் வேலை உலகின் பல்வேறுபட்ட தன்மைகளும்

- ★ அரசமற்றும், அரசுசார்ந்த துறைகள்
- ★ தனியார் துறைகள்
- ★ சுய தொழில்கள்

தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதில் அரசுடன் தனியார் துறையும் பங்களிப்புச் செய்கிறது. அதனைப் போலவே சுயதொழில்களும் தேசிய வருமானத்திற்குப் பாரியளவில் பங்களிப்புச் செய்து வருகின்றன.

ஊழியம் வழங்கும் தன்மைக்கேற்ப வேலை உலகு பின்வருமாறு வகைப்பத்தப்படுகின்றது.

- ★ உள உழைப்பினை அதிகமாகப் பயன்படுத்தும் தொழில்கள்

  உதாரணம் - கணக்காளர், வைத்தியர், ஆசிரியர்
- ★ உடல் உழைப்பினை அதிகமாகப் பயன்படுத்தும் தொழில்கள்

  உதாரணம் - விவசாயிகள், தொழிலாளர்கள், ஆடை உற்பத்தி

ஆனால் அனேகமான தொழில்களுக்கு உடலோடு, உள உழைப்பும் அவசிமாகின்றது. உதாரணம் : பொறியியலாளர்

**செயற்பாடு I**

வார இறுதிச் செய்தித் தாள் ஒன்றின் வேலை வாய்ப்புத் தொடர்பான தகவல்களைப் பரீட்சித்துப் பாருங்கள். அதில் காணப்படும் பல்வேறு வேலைவாய்ப்புகளை அந்தத் துறைகளுக்கேற்ப அட்டவணைப்படுத்துங்கள்.

மேலுள்ள செயற்பாட்டினூடாக வேலை உலகம் எந்தளவில் விரிவடைந்துள்ளது என்பதை உங்களால் அறிய முடியும். நீங்கள் அறியாத தொழில்கள் எவ்வளவு காணப்படுகின்றன? புதிய தொழில் வாய்ப்புகள் எவ்வளவு உருவாகியுள்ளன என்பதை அவதானிக்கவும்.

## 5.2 ஊழியத்தின் கௌரவமும் பெறுமதியும்

பிரதீபன் 8 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவனாவான். பிரதீபனுக்கும் அவனது தாத்தாவிற்கும் இடையில் இடம் பெற்ற ஓர் உரையாடல் கீழே தரப்படுள்ளது.

தாத்தா - மகன், இந்தச் சோறு முழுவதையும் சாப்பிட்டு முடிக்க வேண்டும். இது நமது வயலிலிருந்து உற்பத்தி செய்து கொண்டுவந்த அரிசியாகும்.

பிரதீபன் - சரி தாத்தா, அரிசியைப் பெற ஏன் இவ்வளவு கஷ்டப்பட வேண்டும் கடையில் வேண்டிய அளவு அரிசி இருக்கின்றது தானே?

தாத்தா - அது உண்மைதான், நாம் உணவு சமைப்பதற்கு எடுக்கின்ற நெல் மணிகளின் பெறுமதி எவ்வளவென்று உங்களுக்கு எண்ணிப் பார்க்க முடியுமா?

பிரதீபன் - நீங்கள் சொல்வது பணத்தின் பெறுமதியா தாத்தா?

தாத்தா - இல்லை, சோறு சமைக்க நாம் அரிசியை நெல்லிலிருந்தே பெற்றுக்கொள்கின்றோம் என்பது தெரியும் தானே? இந்த நெல்லினை உற்பத்தி செய்யும் மனிதர்களின் முக்கியத்துவம் பற்றி எண்ணிப் பார்க்க முடிகின்றதா?

பிரதீபன் - தாத்தா. அது பற்றி நான் எதுவும் சிந்திக்கவில்லை. ஆனால், எனக்கு அதைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆசையாக உள்ளது.

தாத்தா - நெற்கதிர்கள் தோன்றி அரிசியாவதற்குப் பல மாதங்கள் ஆகின்றன. இதற்கு எத்தனையோ மனிதர்கள் முயற்சியும் பயன்படுகின்றது.

பிரதீபன் - பல்வேறு நபர்களென்றால் யார் அவர்கள்? விவசாயிகளா?

தாத்தா - இல்லை மகனே, விவசாயி தான் பிரதானமாக ஈடுபடும் நபராவார். ஆனால், நெற்செய்கைக்கு அவசியமான சேவையினை வழங்குவதற்குப் பல்வேறு நபர்கள் உதவுகின்றனர்.

அதாவது பீடைநாசினி உற்பத்தியாளர்கள், விவசாய உபகரண உற்பத்தியாளர்கள், போக்குவரத்துச் சேவை வழங்குநர். களஞ்சியப் படுத்துபவர்கள், விற்பனையாளர்கள் என ஒரு பெரிய குழுவினர்கள் பங்களிப்புச் செய்கின்றனர். அரச நிறுவனங்களும் நிறையவே உதவி வழங்கிவருகின்றன.

பிரதீபன் - அவை எவ்வாறான நிறுவனங்கள் தாத்தா?

தாத்தா - நீர்ப்பாசனத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், விவசாய ஆராய்ச்சி நிறுவனம் போன்றவற்றின் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பெரிய குழுவினர் செயற்படுகின்றனர்.

பிரதீபன் - தாத்தா, நீங்கள் முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் இப்போது எனக்குத் தெரியும். அதன் படி பார்க்கும் போது எம்மால் நெல் மணியின் பெறுமதியை அளவிட முடியாது. அப்படித் தானே தாத்தா.



**உரு 5.5 நெல் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள்**

மேலே காணப்பட்ட உரையாடலை வாசிக்கும் போது ஒரு நெல் மணி அரிசியாவதற்கு ஒரு பெரிய குழுவினரின் செயற்பாடுகள் உதவுவதைக் காணலாம் தற்கால உலகில் விவசாய நடவடிக்கைக்காக நவீன முறைகள் பாவிக்கப்படுகின்ற போதிலும் இவற்றுக்காகப் பல்வேறுபட்டவர்கள் பங்களிப்புச் செய்கின்றார்கள் ஆனால் இந்தப் பங்களிப்பு வெளிப்படையாகக் காணமுடியாது. பயிர்ச் செய்கையின் போது விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கு உரப்பாவனை அவசியமாகும். அதற்காகவே உரம் செய்யப்படுகின்றது. உரம் உற்பத்தி செய்வதற்கு முன் விவசாய ஆராய்ச்சிகள் மூலம் தாவரங்களுக்கு அவசியமான போசணைகளைக் கண்டு பிடிக்க வேண்டும்.

இதன்படி விஞ்ஞானிகளால் சிறிய அளவில் உரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அதன்பின்னர், தாவரங்களுக்கு இட்டு அதன் பயன் தொடர்பாகப் பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றது. அதன் பின்னரே தொழிற்சாலைகளில் பெரிய அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வாறு தொழிற்சாலையின் ஆரம்ப நிலையில் இருந்து இயந்திர சாதனங்களை இயக்குபவர்கள் வரை அனைவரும் இந்தச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். இதன் பின்னர் உரம் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தப்படும். அதன் பின் தேவையான இடங்களுக்குப் பாவனைக்காக அனுப்பப்படும். உரம் உற்பத்தியிலிருந்து விவசாயி வயலில் பயன்படுத்தும் வரை நடைபெற்ற செயல்களில் பல்வேறுபட்ட நபர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவ்வாறான உற்பத்தி நடவடிக்கைகளில் மறைமுகமான உழைப்பும் வழங்கப்படுகின்றது என்பதை நாம் அறிவோம்.

இது போன்ற நேரடியான உழைப்பைப் போல் மறைமுகமான உழைப்பும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த நடவடிக்கைகளில் ஏதாவதொன்று சரியான முறையில் நடைபெறாவிட்டால் அது, முழுச் செயற்பாடுமே தடைப்படுவதற்குக் காரணமாக அமைந்துவிடும்.

**உதாரணம்** - உரம் லொறியில் ஏற்றுபவர் தனது கடமையைச் சரியான நேரத்தில் செய்யா விட்டால் விவசாயியின் கைக்குத் தாமதமாக உரம் கிடைக்கும் இதனால் விளைச்சலை முறையாகப் பெறமுடியாத நிலை ஏற்படுகின்றது.

மேலுள்ள உதாரணத்தின் மூலம், உற்பத்தி நடவடிக்கைகளின் போது சேவையை வழங்குபவரின் உழைப்பு மிகவும் பெறுமதியுடையது. ஆகவே அந்த உழைப்பிற்கு நாம் மதிப்பளித்தல் வேண்டும். விவசாய நடவடிக்கைக்கு மாத்திரமல்ல. எல்லா உற்பத்திகளிலும் இவ்வாறுதான் உழைப்பு வழங்கப்படுவதைக் காணமுடியும். பெரும்பாலும் உற்பத்திகளுக்கு விலை தீர்மானிக்கப்படுவது உழைப்பு வழங்கப்படும் அடிப்படையிலேயே ஆகும்.

உற்பத்தி நடவடிக்கைகள் போன்றே சேவையினை வழங்குகின்ற அனைத்து ஊழியர்களினதும் உழைப்பும் பெறுமதியுடையதே. மின் விநியோகம் சமூதாயத்திற்கு மிகவும் அவசியமான சேவையாகும். மின் விநியோகம் தடைப்படும் பட்சத்தில் எவ்வாறான விளைவுகள் ஏற்படும்? அப்பிரதேச உற்பத்திகள் தடைப்படும், வீட்டின் நடவடிக்கைகள் தடைப்படும், பெரும் தெருக்கள் இருளடையும், வியாபார நிலையங்களின் பொருட்களின் களஞ்சியப்பபடுத்தும் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடையும், வானொலி, தொலைக்காட்சி, போன்ற தொடர்பு சாதனங்கள் தடைப்படல் போன்ற பல்வேறுப்பட விளைவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் சேவை வழங்கல் குறைவடையும் அல்லது தடைப்படும் போது அதனால் ஏற்படும் பிரச்சினையானது மோசமான நிலையினைத் தோற்றுவிக்கும் சமூகத்தின் விருத்திக்குத் தடங்கலாக அமையும்.

உற்பத்திக் குறைவின் காரணமாகத் தேசிய வருமானம் குறைவடையும். இதனால் அனைத்துத் தொழில்களும் சமூக நிலைப்பாட்டிற்கு அத்தியாவசியமானவையாகும்.

இந்த சேவையாளர்களின் உழைப்பினைப் பெறுமுகமாக உயர்மட்ட அதிகாரியிலிருந்து பல்வேறு தராதரங்களையுடைய அனைவரினதும் உழைப்பானது ஒன்றானதும் சமமானதுமான பெறுமதியுடையவையே.

உ-ம் - மின்சாரப் பொறியியலாளர், முகாமையாளர், நிர்வாகிகளைப் போன்ற தொழிலாளர்கள், பாதுகாப்பு அதிகாரிகள், சாரதிகள் அனைவரும் இச்சேவையைச் செயற்திறனுடன் மேற்கொள்வதில் பங்களிப்புச் செய்கின்றனர். எனவே உயர் பதவியிலுள்ளோர் போலவே அனைவரினதும் சேவைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

**செயற்பாடு II**

நீங்கள் பயன்படுத்தும் இந்த இலவசநூல் உங்கள் கைகளுக்குக் கிடைப்பதற்காக எத்தனை பேர் தமது உழைப்பினை வழங்கியிருப்பார்கள் என்பதை உங்கள் ஆசிரியரோடு கலந்துரையாடுங்கள். இவ்விலவச நூலின் முதல் பக்கத்திலிருந்து வாசிப்பதன் மூலம் உங்களுக்கு இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## 5.3 அனைத்துத் தொழில்களுமே சமூகத்தின் வளர்ச்சிக்குக் காரணமாகும்

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு சமூக, பொருளாதார, கலாசாரம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளினதும் வளர்ச்சி காரணமாகின்றது. அதற்கேற்ப நாட்டின் அபிவிருத்திற்கும் சமூக நல் நிலைப்பாட்டிற்கும் பல்வேறு காரணிகள் பூர்த்தியாக வேண்டும். அவற்றில், கீழ் காணும் விடயங்கள் முக்கியமானவையாகும்.

- ❖ வாழ்க்கைக்காக நிரந்தரமான வருமானம் கிடைத்தல்.
- ❖ உணவு, உடை, உறையுள் முதலிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்
- ❖ உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்.
- ❖ சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, மின்சாரம், நீர்வசதி முதலியவற்றை மேம்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்

- ❖ ஓய்வு நேரத்தைப் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தச் சந்தர்ப்பம் கிடைத்தல் - உ-ம் பொழுதுபோக்குச் சாதனங்கள், விளையாட்டு முதலியன.
- ❖ பாதுகாப்பினைப் பலப்படுத்துதல் - பொலிஸ், பாதுகாப்புப் படையினர்

மேற் கூறப்பட்ட அடிப்படைத் தேவைகள் உட்பட வேறு சேவைகளுக்காக ஊழியம் வழங்கும் நபர்களைப் பற்றிக் கவனம் செலுத்தவோம் உங்களுடைய பாடசாலைப் பேரூந்துச் சாரதி, ஒரு நாள் சேவைக்கு வராவிட்டால் அன்றைய தினம் உங்களுடைய பாடசாலைப் பேரூந்து தாமதமாகும். இதனால் அன்றைய தினம் உங்களது நடவடிக்கைகளுக்குத் தடையேற்படும். அதனைப் போலவே நகரச் சுத்திகரிப்பாளர்கள் தமது சேவையினை முறையாக மேற்கொள்ளாவிடின் எவ்வாறான நிலைமை ஏற்படும்?

## செயற்பாடு III

கீழே காணப்படும் அட்டவணையைப் பூரணப்படுத்தி பல்வேறுபட்ட சேவைகளுக்காக உழைப்பினை வழங்குபவர்களும், அவர்கள் நாட்டின் அபிவிருத்திக்கும் சமூக வளர்ச்சிக்கு உதவும் விதம் பற்றியும் அறிந்து கொள்ளுங்கள்.

| **சேவைத்துறை** | **உழைப்பினை வழங்குபவர்கள்** | **நாட்டின் அபிவிருத்திக்கான பங்களிப்பு** |
|---|---|---|
| கல்வி | | |
| சுகாதாரம் | | |
| போக்குவரத்து | | |
| பாதுகாப்பு | | |

### ★ அர்ப்பணிப்புடன் உழைத்தல்

ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்ட வேலைகள் சமூக இயக்கத்திற்கு அத்தியாவசியமாகும். அவர்கள் அவற்றினைப் பொறுப்புடன் மேற்கொள்வராயின் அது நாட்டின் அபிவிருத்திக்கு வாய்ப்பாக அமையும். தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட சேவைகளைச் செயற்றிறன் மிக்கதாகச் செய்வதால் அவர்களுக்கு விலைமதிப்பற்ற மகிழ்ச்சி ஏற்படும். அது சமூகத்தின் மதிப்பைப் பெற்றுத்தரும். தன்னுடைய உழைப்புத் தொடர்பாக இவ்வாறான மனநிலை காணப்படுவது அர்ப்பணிப்புடனான உழைப்பு எனலாம். மாணவர்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறும்போது அவர்களுக்குக் கற்றுக் கொடுத்த ஆசிரியர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். ஏனையவர்களும் அவர்களைப் பாராட்டுவார்கள். அது அவர்களின் உழைப்பிற்கு கிடைக்கும் மனத்திருப்தியாகும்.

## 5.4 பயிற்றப்பட்ட ஊழியம்

ஒரு உற்பத்தி அல்லது சேவையை சிறந்த முறையில் பெற்று கொடுப்பதற்கு ஒரு நபர் வழங்கும் உழைப்பைப் பயன்மிக்க உழைப்பாகக் குறிப்பிடலாம். இதை உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் பல்வேறு விதமாக உபயோகிக்கலாம்.

உடல் ரீதியாக மேற்கொள்ளப்படும் தொழில்கள் 'உடல் உழைப்பு' எனவும் உள ரீதியாக மேற்கொள்ளும் உழைப்பு 'உள உழைப்பு' என்றும் இனங்காண முடியம். அநேகமான வேலைகளில் உடல் உள உழைப்பு இரண்டும் அவசியமாகும்.

பொருளியலாளர்களின் கருத்திற்கேற்ப உழைப்பு என்பது உற்பத்திச் சாதனமாகும். எந்த ஒரு பொருளையும் உற்பத்தி செய்யப் பல உற்பத்திச் சாதனங்கள் தேவைப்படும். அவற்றின் செயற்றிறன் அதிகரிக்கும் போது உற்பத்திகளின் அளவும் தரமும் அதிகரிக்கும். அதனூடாக இலாபமும் அதிகரிக்கும்.

நபர்களின் உழைப்பின் செயற்றிறனை அதிகரிக்க இலகுவான பொருத்தமான முறை அவர்களின் தொழிற் தேர்ச்சியை வளர்ப்பதாகும். அதாவது அந்த உழைப்பாளிகளைப் பயிற்றுவிப்பதாகும். பயிற்சி என்றால் என்னவென்று கவனிப்போம்.

உழைப்பாளிகளைப் பயிற்றுவிக்கும்போது அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றோடு ஒழுக்கம், கட்டுப்பாடு வளர்க்கப்படுகின்றது. அதனால் உண்டாகும் நிபுணத்துவத்தினூடாக அந்த நபர் பயிற்றப்பட்ட உழைப்பாளி ஆனார். 19 ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட தொழில்நுட்பப் புரட்சியின் காரணமாகப் ''பயிற்றப்பட்ட உழைப்பு'' என்பது முக்கிய கருத்தாக மாறியது.

அநேகமான உற்பத்தி நிலையங்களில் தமது உற்பத்தித் தரத்தினை உயர்த்தும் நோக்கத்துடன் ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பது முக்கிய செயற்பாடாக மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான பயிற்சிகள் வேலை பெறுவதற்கு முன்போ (Pre-job Training) அல்லது வேலை செய்யும் போதே (On -job training) வழங்கப்படுகின்றன. வேலை உலகில் எமக்குக் கிடைக்கின்ற தொழில்களை நாம் சிறப்பாக மேற்கொள்வதற்கு விசேடமாகப் பயிற்றப்பட்ட ஊழியம் மிக அத்தியாவசியமானது. உதாரணமாக விமானம் செலுத்துதல், நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்தல், புதிய இயந்திர சாதனங்களை இயக்குதல் என்பவற்றுக்கு எமக்குப் பயிற்சி மிகவும் அவசியமாகும். அனுபவம் ஊடாக இந்தப் பயிற்சி மேலும் பயனுள்ளதாக மாறும். இது அவர் பெறும் விசேட நிபுணத்துவமாகும். இவ்வாறு பயிற்சி பெற்ற ஊழியர்கள் காணப்படுவதனூடாகத், தொழில் துறைகள் மிகவும் வெற்றிகரமாகச் செயற்படுவதனை நாம் அறியலாம்.



**உரு 5.6 விமான ஓட்டுநர்**



**உரு 5.7 வைத்திய சேவை**

சில உடல் உழைப்பினைப் பயன்படுத்தும் தொழில்களுக்கு விசேட பயிற்சிகள் அவசியமற்றதாகும். ஆனால் வளர்ச்சியடைத்துவரும் உலகில் அநேக செயற்பாடுகளுக்காகச் சிறப்பான முறைகளைப் பாவிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. பயிற்சியற்ற ஊழியர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் அத்தொழிலில் உற்பத்தித் திறனையும் செயற்திறனையும் அதிகரிக்க முடியும்.

இன்று அதிகமானவர்கள் வருமானம் பெறுகின்ற வேலைகளைச் செய்யவே விரும்புகின்றார்கள் இதற்காக இன்று இந்த வேலை உலகில் பல்வேறு வழிமுறைகள் காணப்படுகின்றன. நன்றாகக் கற்று பரீட்சையில் சிறந்த சித்தியினைப் பெற்றுப் பல்கலைக்கழகம் செல்வதே அதிக மாணவர்களின் கனவாகும். இன்று அநேக நாடுகளில் பல்கலைக்கழகங்கள் தொழில்சார்

பாடநெறிகளை ஆரம்பித்துள்ளன. இலங்கையிலும் இவ்வாறான நிலைமைகள் இருக்கின்றன. பல்கலைக்கழகங்களிலோ அல்லது ஏனைய உயர்கல்வி நிலையங்களிலோ வாய்ப்புக் கிடைக்காத மாணவர்கள் அது பற்றி மனக் குழப்பம் அடைய வேண்டிய அவசியமில்லை. பல்வேறுபட்ட அரச தனியார் நிறுவனங்களுங்கூட பல்வகைப் பயிற்சி நெறிகளை ஆரம்பித்துச் செயற்பட்டு வருகின்றன.

தொழில் பயிற்சியினை பெற்றுக் கொடுக்கின்ற அரச நிறுவனங்கள் சில

- ❖ தொழிற் பயிற்சி அதிகாரசபை
- ❖ தேசிய பயிலுநர் பயிற்சி நிலையம்
- ❖ இளைஞர் சேவைகள் மன்றம்




**உரு 5.8 தொழிற்பயிற்சி நெறிகள் பற்றிய பத்திரிகை விளம்பரம்**

இதன் பொருட்டு பயிற்சி பெற்றுக்கொள்ளும் ஒருவருக்குத் தராதாரம், வயது என்பன அடிப்படையானவைகள் அல்ல. பயிற்சி பெறாத உழைப்பை விட பயிற்சி பெற்ற உழைப்பிற்கு அதிக முக்கியத்துவம் உண்டு. பயிற்றப்பட்ட ஊழியர்களுக்காக அரச நிறுவனங்களிலும் தனியார் துறையிலும் அதிக வேலை வாய்ப்புகள் காத்திருக்கின்றன.

இதனால் பாடசாலைக் கல்வியினை முடித்துக் கொண்ட ஒரு மாணவர் தனது பெறுமதியான காலத்தை வீணாக்கத் தேவை இல்லை. நாட்டின் அபிவிருத்திக்காக உமது உழைப்பினை வழங்குவதனூடாக சமூகத்தில் சிறந்த பிரஜையாக இருப்பதற்கான வாய்ப்பு உங்களுக்கும் உண்டு.

## சிறந்த உழைப்பாளியின் பண்புகள்

நாட்டின் உயிர்நாடியாக உள்ளவர்கள் வேலை செய்யும் மக்களே. எனவே உழைப்பு மிகவும் பிரதானமானது. நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்ல அவர்களின் அர்ப்பணிப்பும் நல்மனப்பாங்கும் கொண்ட பங்களிப்பானது மிகவும் அத்தியாவசியமானதாகும். இதனால் கௌரவமான சமூகத்தினை நிர்மாணிக்கும் வாய்ப்புகள் உள்ளன.

சிறந்த ஊழியர்களின் பண்புகள் எவையெனப் பார்ப்போம்.

- ❖ செய்யும் தொழிலின் நிபுணத்துவத்தினைப் பெற்றுக் கொள்ளல்.
- ❖ செயற்றிறன் மிக்கவராகச் செயலாற்றுதல்.
- ❖ அர்ப்பணிப்புடன் செயலாற்றுதல்.
- ❖ தாம் செய்யும் தொழிலினைச் சிறந்த நோக்கோடு மேற்கொள்ளல்.
- ❖ தொழில் செய்யும் போது தொழிலில் திருப்தி அடைதல்.
- ❖ தொழில் தொடர்பாக ஏற்படும் பிரச்சினைக்கு முறையாக முகங்கொடுப்பதோடு அதற்குத் தீர்வு காண்பவராகயிருத்தல்

## சாராம்சம்

- ❖ வேலை உலகம் பல்வேறு தன்மை வாய்ந்ததாகும்
- ❖ தொழில்களை உயர்ந்தது தாழ்ந்தது எனப் பிரிக்க முடியாது
- ❖ தொழில்கள் அனைத்தும் சமூகத்தின் இயக்கத்திற்கும் நிலைப்பாட்டிற்கும் அவசியமானவையாகும்
- ❖ எல்லோருடைய உழைப்பும் முக்கியமானதாக விளங்குவதோடு எல்லோரும் மற்றவரது உழைப்பிற்கு மதிப்பளிக்க வேண்டும்
- ❖ பயிற்றப்பட்ட தொழில்கள் நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானவையாகும்.

## ஒப்படை

உங்களின் திறமைக்கு ஏற்ப உங்கள் எதிர்க்காலத்திற்கு அவசியமான தொழில் துறையொன்றினைத் தேர்ந்தெடுங்கள்.

நீங்கள் தேர்ந்தெடுத்த தொழிலின் தகைமை, அடிப்படைத் தகுதிகள், வாய்ப்புகள் என்பவற்றைக் கொண்டு ஒரு விளக்கக் குறிப்பு எழுதுக.

நீங்கள் தயாரித்த அந்த விளக்கக் குறிப்பினை நீங்கள் அடிக்கடி காணும் இடத்தில் காட்சிப்படுத்துங்கள்.